Register No. [ ]

**FPE** **4956–21**

(For the candidates admitted from 2009 – 2010 to 2016 – 2017)

B.A.B.L/B.A.LL.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.

(Five – year Regular Course)

First Year – First Semester

# LAW OF TORTS

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding six pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. "Trespass interferes with the possession of the land, whereas Nuisance interferes with the enjoyment of the land"–Comment.

   "அத்துமீறல் ஒருவரது நிலத்தின் உடைமையில் தலையிடுவதாகும்; தொல்லை தருதல் ஒருவரது நிலத்தின் அனுபவிக்கும் உரிமையில் தலையிடுவதாகும்" – கருத்துக் கூறுக.

2. Bring out the two important essentials of vicarious liability.

   பகரப் பொறுப்பின் இரண்டு முக்கியக் கூறுகளை வெளிக்கொணர்க.

3. What is right of private defence? How far it can be exercised?

   தற்காப்பு உரிமை என்றால் என்ன? அவ்வுரிமையை எவ்வளவு தூரம் உபயோகிக்கலாம்?

4. How far contributory Negligence is a defence? How last opportunity rule was introduced?

   எந்த அளவிற்கு தற்பாற்கவனமின்மை ஒரு எதிர்வாதமாக செயல்படுகிறது? கடைசி வாய்ப்பு விதி எவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டது?

5. Explain the liability of the owners of dangerous buildings and its premises.

   அபாயகரமான கட்டிடங்கள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் உரிமையாளர்களின் பொறுப்பு நிலையை விளக்குக.

## PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Injuria Sine Damno

சேதமில்லாத் தீங்கு

(b) Relevance of malice

தீங்கெண்ணத்தின் அவசியம்

(c) Married woman

திருமணமான பெண்

(d) Common employment

பொதுவேலைக் கோட்பாடு

(e) Exemplary or deterrent or vindictive damages

முன்னுதாரண அல்லது பயமுறுத்தும் இழப்பீடு

(f) Test of reasonable foresight

நேரிய வகையில் முன்னறியத்தக்கநிலை

(g) Nervous shock

நரம்புமண்டல அதிர்ச்சி

(h) Innuendo

மறைமுக அவதூறு

(i) Malicious prosecution

தீங்கெண்ணத்துடன் வழக்கிடல்

(j) Bopal Gas leakage disaster

போபால் விஷவாயுக் கசிவு பேரிடர்.

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' went towards 'B' with a closed hand and caused a fear in his mind that he may be attacked. What is the wrong 'A' has committed?

'A' என்பவர் 'B' ஐ நோக்கி மூடிய கையுடன் சென்றார். அதன் மூலம் 'B' -யின் மனதில் தான் தாக்கப்படுவோமோ? என்ற எண்ணத்தை ஏற்படுத்தினார்? இங்கு 'A' என்ன தவறிழைத்துள்ளார்?

8. ‘A’ is a master. ‘B’ and ‘C’ are his fellow servants, working under ‘A'. One day by the negligence of ‘B’, ‘C’ was seriously injured. What is the liability of ‘A’ here?

‘A’ என்பவர் ஒரு பணித்தலைவர். ‘B’ மற்றும் ‘C’ ஆகியோர் சக பணியாட்கள். ஒரு நாள் ‘B’ -யின் கவனமின்யால் ‘C’ கடினமாகக் காயமடைகிறார். இங்கு ‘A’-யின் பொறுப்பு நிலை யாது?

9. ‘X’ had a flour mill and he was operating the machinery which were very loud. His neighbour ‘Y’ filed a case for nuisance. But X argued that he was making this noisy work for the past 18 years. Will he succeed?

‘X’ ஒரு மாவுமில் உரிமையாளர். அவரது அண்டைவீட்டுக்காரர் ‘X’ -ன் மாவு மில்லியிருந்து வரும் சப்தமானது தனக்கு தொல்லை தரும் வகையில் உள்ளதாக வழக்கிட்டார். ஆனால், ‘X’ தான் இச்செயலை கடந்த 18 வருடங்களாக செய்த வருவதாகவும் அதனால் தான் பொறுப்பாக மாட்டேன் எனவும் வாதிட்டார். ‘X’ வெற்றி பெறுவாரா?

10. ‘R’ and ‘S’ were neighbouring landowners. ‘R’ chased out S’s cattle to a long distance. S was not able to trace them for a long time. Has R committed any offence.

‘R’ மற்றும் ‘S’ ஆகியோர் அண்டை நிலத்துக்காரர்கள். ‘R’ ‘S’-ன் கால்நடைகளை வெகுதூரம் துரத்திச் சென்று விட்டுவிட்டார். நெடுநேரம் வரை ‘S’ அவற்றைக் கண்டறிய முடியவில்லை. ‘R’ செய்த தவறு யாது?

11. ‘M’, in his own land was digging an extensive well. Because of this the underground water supply to ‘N’s land was affected. ‘N’ brought an action for cutting the underground water supply. Will ‘N’ succeed?

‘M’ என்பவர் தனது சொந்த நிலத்தில் ஒரு ஆழமான கிணறு ஒன்றைத் தோண்டினார். இதனால் ‘N’ என்பவரது நிலத்தடி நீர் குறைந்தது. N, M மீது நிலத்தடி நீரைக் குறைத்தற்காக வழக்கிட்டார். ‘N’ வெற்றி பெறுவாரா?

12. ‘X’s dog and 'Y's dog chased ‘Z’s sheep. Who is liable here?

‘X’-ன் நாயும் 'Y'-ன் நாயும் சேர்ந்து ‘Z’-ன் ஆடுகளை துரத்தின. இங்கு யார் பொறுப்பாவார்?

———————